**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

**விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை நீடிப்பு மற்றும் தகைமை வரையறைகளில் திருத்தஞ் செய்தல்**

**இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுபானம் சார்ந்த உற்பத்திகளுக்கான பாதுகாப்பு அமிசங்கள் மற்றும் பாதுகாப்பு அமிச முகாமைத்துவ முறையின் (SFSFMS) வழங்கல், செயற்படுத்தல் மற்றும் இயக்குதலிற்கான பெறுகை.**

**IFB No: ED/AC/20/F/19/2026**

முந்தைய பிரசுரத் திகதிகள்: **2026** யூலை **20** மற்றும் **2026** ஓகஸ்ட் **28**

1. "இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுபானம் சார்ந்த உற்பத்திகளுக்கான பாதுகாப்பு அமிசங்கள் மற்றும் பாதுகாப்பு அமிச முகாமைத்துவ முறையை (SFSFMS) வழங்கல், செயற்படுத்தல் மற்றும் இயக்குதல்" தொடர்பான விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான **கால எல்லை 2026 ஒக்டோபர் 06 ஆம் திகதி** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2. விலைமனுக்கள் **2026 ஒக்டோபர் 06** ஆம் திகதி **பிற்பகல் 3.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னதாக, **மதுவரித் திணைக்களம், நான்காவது மாடி, இல.** 353, கோட்டே வீதி, **ராஜகிரிய** என்ற முகவரிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தாமதமாகப் பெறப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். **2026 ஒக்டோபர்** 06 ஆம் திகதி **பிற்பகல் 3.00** மணிக்கு விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை முடிந்த உடனேயே, வருகை தரும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

3. **திருத்தஞ் செய்யப்பட்ட** தர மற்றும் பாதுகாப்புத் தேவைப்பாடுகள்:
   a. விலைமனுதாரர் ISO 9001, ISO 14298 அல்லது HSSMS, ISO 27001, முன்னர் சர்வதேச ஹோலோகிராம் உற்பத்தியாளர் ஒன்றியம் (IHMA) மற்றும் சர்வதேச வரி முத்திரை ஒன்றியம் (ITSA) என அறியப்பட்ட சர்வதேச கட்புல தொழில்நுட்பவியல் ஒன்றியம் (IOTA) ஆகியவற்றின் சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.
   b. ISO 37001 (இலஞ்ச ஒழிப்பு முகாமை முறைகள்) சான்றிதழ் பெற்ற விலைமனுதாரர்களுக்குத் தொழில்நுட்ப மதிப்பீட்டின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

4. பெறுகை ஆவணத்தில் செய்யப்படும் திருத்தங்கள் ஒரு மேலதிக இணைப்பில் (Addendum) சேர்க்கப்படும்; இது மதுவரித் திணைக்கள இணையதளத்தில் வெளியிடப்படுவதோடு, பெறுகை ஆவணங்களை கொள்வனவு செய்யும் அனைத்து விலைதாரர்களுடனும் பகிரப்படும்.

**தலைவர்,**
**உயர் மட்ட பெறுகைக் குழு**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,**
**இலங்கை மதுவரித் திணைக்களம்,**
**இல. 353, கோட்டே வீதி,**
**ராஜகிரிய**

CONFIDENTIAL DOCUMENT

**2026 செப்டெம்பர் 14 ஆம் திகதி**

CONFIDENTIAL DOCUMENT